## 11

ஆரக்கால் முப்பதும்
சக்கரத்தின் மையத்தில் இணைகின்றன;
ஆனால், சக்கரத்தின் பயன்
அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.

பாண்டம்பாண்டமாகக்
களிமண் வனையப்படுகிறது;
ஆனால், பாண்டத்தின் பயன்
அதன் காலிப் பகுதியால் கிடைக்கிறது.

வீட்டுச் சுவர்களில்
வாயிலுக்காகவும் ஜன்னலுக்காகவும்
வெற்றுவெளியை விடுகிறோம்;
ஆனால், வாயிலும் ஜன்னலும்
வெற்றுவெளி என்பதால் பயன்படுகின்றன.

எனவே, ஒரு பக்கம்
இருத்தலின் பலன் கிடைக்கிறது;
இன்னொரு பக்கம்
இருத்தலின்மையைப் பயன்படுத்திக்கொள்கிறோம்.

## 63

செயல்படாமையைச் செயல்படுத்து;
முயற்சியின்மையை முயற்சிசெய்;
சுவையற்றதைச் சுவை.

ஞானி ஆசையின்மைக்கு ஆசைப்படுகிறான்;
அவன் பெறுவதற்குச் சிரமப்படுகிற எதையும்
மதிப்பதில்லை.
ஞானி புலமைக்காக எதையும் கற்பதில்லை;
ஆனால், அவன் மற்றவர் அனுபவங்களைச்
சீர்தூக்கிப்பார்க்கிறான்.
இவ்வாறு
ஞானி அனைத்தையும் இயற்கையாக
வளர விடுகிறான்;
அவன் செயல்படுவதற்குத் துணிவதில்லை.

சிறியதைப் பெரியதாகக் கருது;
சொற்பத்தை ஏராளம் என்று நினை.
எளிதாக இருக்கும்போது
கடினமானதைச் சமாளி;
சிறியதாக இருக்கும்போது
பெரியதைச் சமாளி.

இந்த உலகத்தில் கடினமான விஷயங்கள்
எளிதானவற்றிலிருந்து தொடங்குகின்றன;
இந்த உலகத்தில் பெரிய விஷயங்கள்
சிறியவற்றிலிருந்து தொடங்குகின்றன;
ஒரு மனிதன் கட்டிப்பிடிக்கிற அளவு மரம்
மென்மையான குருத்திலிருந்து கிளம்புகிறது;
ஒன்பது மாடி கோபுரம்
சிறு மண் குவியலிலிருந்து எழும்புகிறது;

ஆயிரம் மைல் பயணம்
காலடி நிலத்திலிருந்து தொடங்குகிறது.
எனவே, பெரிய விஷயங்களை
ஞானி ஒருபோதும் செய்ய முயல்வதில்லை;
அதனால், பெரிய விஷயங்களை
அவன் எப்போதும் சாதிக்க முடிகிறது.

வாக்குறுதிகளை எளிதில் தருகிற மனிதன்
ஒருபோதும் தன் சொல்லைக் காப்பாற்ற மாட்டான்;
பல விஷயங்களை எளிதென்று கருதுகிற மனிதன்
பல இடர்களைச் சந்திப்பான்.
எனவே, விஷயங்கள் அனைத்தையும்
ஞானி கடினமென்று கருதுகிறான்.
அதனால் அவனுக்கு
ஒருபோதும் இடர்கள் ஏற்படுவதில்லை.

## 67

உலகம் அனைத்தும் என்னிடம் சொல்கிறது:
''தாவோ மகத்தானது என்றாலும்
அது எந்த விவரணைக்கும்
பொருந்துவதில்லை'' என்று.

மகத்தானது என்பதால்
அது விவரணை எதற்கும் பொருந்துவதில்லை;
விவரணை எதற்காவது பொருந்தியிருந்தால்
அது எப்போதோ சிறுத்துப்போயிருக்கும்.

நான் பத்திரமாகப் பாதுகாத்து வைத்திருக்கிற
மூன்று பொக்கிஷங்கள் என்னிடம் இருக்கின்றன.
முதலாவது, அன்பு எனப்படுகிறது.
இரண்டாவது, மிதம் எனப்படுகிறது.
மூன்றாவது, உலகத்தை முந்திக்கொண்டு
செல்லத் துணியாமை எனப்படுகிறது.

அன்பாக இருப்பதால்
ஒருவன் துணிவோடு இருக்க முடியும்;
மிதமாக இருப்பதால்
ஒருவன் வளமையாக இருக்க முடியும்;
உலகத்தை முந்திக்கொள்ளத் துணியாததால்
ஒருவன் அதிகாரிகளின் தலைவனாக இருக்க
முடியும்.

அன்புக்குப் பதிலாக
மனிதன் துணிச்சலை மட்டுமே பெற்றிருக்கிறான்;
மிதத்துக்குப் பதிலாக
மனிதன் மிகையை மட்டுமே பெற்றிருக்கிறான்;
பின்னால் இருப்பதற்குப் பதிலாக
மனிதன் முந்திக்கொண்டு செல்கிறான்.

இப்படிச் செய்வதெல்லாம்
மனிதனைச் சாவுக்கே அழைத்துச்செல்கின்றன.

ஏனென்றால்,
அன்பின் அடிப்படையில்
போராடுபவன்
போரில் வெற்றி பெறுவான்;
அன்பின் அடிப்படையில்
தன்னைக் காத்துக்கொள்பவன்
பத்திரமாக இருப்பான்.
வானகம் அவனைக் காப்பாற்றும்;
வானகம் அவனை அன்புடன் பாதுகாக்கும்.

## 68

மிகச் சிறந்த போர்வீரன்
வீரத்தனமாக இருப்பதில்லை;
மிகச் சிறந்த போராளி
மூர்க்கத்துடன் இருப்பதில்லை.
மிகச் சிறந்த வெற்றிகளைக் குவிப்பவன்
போரில் பங்குபெறுவதில்லை;
மிகச் சிறந்த முதலாளி
வேலைக்காரர்களுக்குக் கீழே தன்னைத்
தாழ்த்திக்கொள்கிறான்.

இப்படி இருப்பதும் செய்வதும்
போட்டியிடாமையின் பலம் எனப்படுகிறது;
இப்படி இருப்பதும் செய்வதும்
மனிதர்களைப் பயன்படுத்தும் திறம் எனப்படுகிறது;
இப்படி இருப்பதும் செய்வதும்
வானகத்தோடு உறவாடுவதன் மேன்மை
எனப்படுகிறது.